பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 04 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் முன்வர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

2. நகர்ப்புற வாக்காளர்கள் மற்றும் இளைஞர்களின் வாக்கு சதவீதத்தை அதிகரிக்கும் நோக்கில் தேர்தல் ஆணையம் புதிய முயற்சிகளை தொடங்கியுள்ளது.

3. முப்படையினருக்கான **Parivarthan Chinthan** ஒருநாள் மாநாடு, தலைமை தளபதி ஜென்ரல் அனில் சௌகான் தலைமையில் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

4. தென் தமிழகத்திலும், டெல்டா மாவட்டங்களிலும் நாளை முதல் நான்கு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணிக்கு எதிராக டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது. *<u>---- இனி விரிவான செய்திகள் --</u>*

<<<<<<>>>>>

நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கு இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் முன்வர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பீகார் மாநிலம் போத்கயாவில் உள்ள இந்திய நிர்வாகவியல் கல்விக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், இந்தியாவின் எதிர்காலத்தை பிரகாசமாக்கும் பொறுப்பு இளம் சிந்தனை கொண்ட மாணவர்களுக்கு உள்ளது என்று தெரிவித்தார்.

தங்களுக்கான திறமைகளை இளம் வயதிலேயே வளர்த்துக்கொண்டு, பல்வேறு துறைகளிலும் தங்களது பங்களிப்பை மாணவர்கள் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், பீகார் மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத், உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

குடியரசு துணைத்தலைவர், போத்கயாவில் மகாபோதி ஆலயத்திற்கும் சென்று வழிபட்டார்.

<<<<<<>>>>>

நகர்ப்புற வாக்காளர்கள் மற்றும் இளைஞர்களின் வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதற்கான புதிய முயற்சிகளை தேர்தல் ஆணையம் சமூக வலைதளங்கள் மூலமாக மேற்கொண்டு வருகிறது.

வாக்காளர்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 18 வயது பூர்த்தியடைந்த வாக்காளர்களை அணுகுவதற்கும், "ஜனநாயகத்தில் உங்கள் பங்கு முக்கியமானது" என்று வாக்காளர்களை வலியுறுத்தியும், பல்வேறு பிரச்சார இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**Turning-18** என்ற தேர்தல் ஆணையத்தின் பிரச்சார இயக்கத்தின்மூலம், இளம் வாக்காளர்கள் தங்களது வாக்குகளை தவறாமல் செலுத்த வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் என்ற ஜனநாயக நடைமுறையில் ஒவ்வொருவரும் பங்கேற்க வேண்டியதன் அவசியம் குறித்து **'You are the one '** என்ற பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேர்தல் நடைமுறைகள் குறித்த தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், வலைதளங்கள் மூலம் தேர்தல் ஆணையம் சரியான தகவல்களை அளித்து வருகிறது.

முகநூல், இன்ஸ்டாகிராம், **X** தளம், **You Tube** போன்றவற்றிலும், **Whatsapp**-பிலும் தொடர்ந்து தகவல்களை அளித்து தேர்தல் ஆணையம் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தின் வளர்ச்சிக்காக பிஜேபி பாடுபட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தின் ஜல்பைகுரியில் இன்று மாலை தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், இம்மாநிலத்தின் வட மாவட்டங்களில் வளர்ச்சித் திட்டப்பணிகளை அதிக அளவில் பிஜேபி செயல்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசு கொண்டுவந்த பல்வேறு நலத்திட்டங்களை மாநிலத்தை ஆளும் திரிணமுல் காங்கிரஸ் தடுத்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டை வழிநடத்தி செல்வதற்கான எந்தவொரு தொலைநோக்கு பார்வையும் **'I N D I** கூட்டணிக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் வட மாவட்டங்களில் சுற்றுலாவையும், முதலீட்டையும் ஊக்குவிக்கும் வகையில் ஜி-20 உச்சிமாநாட்டில் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பிஜேபி அதிக அளவில் முதலீடுகளை கொண்டுவரும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதனிடையே, மேற்குவங்க மாநிலம் புருலியா என்ற இடத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, மாநிலத்தின் வளர்ச்சிக்காக தமது கட்சி செயல்பட்டு வருவதாக கூறினார்.

குடியுரிமை திருத்தச்சட்டத்தை கொண்டுவந்து, பிஜேபி மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

மத நல்லிணக்கத்திற்கும், மக்கள் சுதந்திரமாக தங்களது மதத்தை பின்பற்றுவதற்கும் அக்கட்சி பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் செல்வி மம்தா பானர்ஜி கூறினார்.

**<<<<<<>>>>>**

மக்களவைத் தேர்தலில் மேற்குவங்க மாநிலத்தில், காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**Bangaon** தொகுதியில் திரு **Pradip Biswas-**ம், **Uluberia** தொகுதியில் திரு அசார் மாலிக்கும், **Ghatal** தொகுதியில் டாக்டர் **Papiya Chakraborty-**யும் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுடன் நடத்தப்படும், **Bhaga Bangola** சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அஞ்சு பேகம், போட்டியிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

முப்படையினருக்கான **'Parivarthan Chinthan'** ஒருநாள் மாநாடு, தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌகான் தலைமையில் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

முப்படைகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில், பல்வேறு சூழ்நிலைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவது, செயல்பாடுகளில் சீர்திருத்தங்களை கொண்டுவருவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் எந்தவொரு சூழ்நிலையையும் ராணுவ ரீதியில் எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசியல் சாசன சட்டப்பிரிவு நீக்கப்பட்டது குறித்து காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறிய கருத்துக்கு, பிஜேபி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, தேசிய கட்சி என்ற தார்மீக அங்கீகாரத்தை இழக்கும் வகையில் காங்கிரஸ் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், அரசியல் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்டது குறித்து திரு மல்லிகார்ஜுன கார்கே பேசியிருப்பதாக அவர் கூறினார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் குறித்து மத்திய அரசு நாட்டின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறியுள்ள நிலையில், ஹமாஸுக்கு ஆதரவாக காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதும், அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திருமதி பிரியங்கா வதேரா ஆகியோர் பேசியிருப்பதும் ஏற்கத்தக்கது அல்ல என்று திரு சுதான்ஷு திரிவேதி கூறினார்.

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த முதல் முறை வாக்காளர், இந்த தேர்தலில் தமது வாக்கை செலுத்துவற்கு வாய்ப்பு கிடைத்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மாணவி – 32 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தென் தமிழகத்திலும், டெல்டா மாவட்டங்களிலும் நாளை முதல் நான்கு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன், மேற்கு தொடர்ச்சி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் மிதமான மழை பெய்யும் என்றும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் - லக்னோ அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

லக்னோவில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

முன்னதாக, மும்பையில் நடைபெற்ற போட்டியில், தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணி 29 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 234 ரன் எடுத்தது.

பின்னர், 235 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தில்லி அணி, 8 விக்கெட் இழப்பிற்கு 205 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

<<<<<<END>>>>>